மார்க்ஸ்
எங்கெல்ஸ்
லெனின்
நூல்கள்

# லெனின்

## குட்டி முதலாளித்துவ சோஷலிசமும் பாட்டாளி வர்க்க சோஷலிசமும்



3—

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# லெனின்

# குட்டி முதலாளித்துவ சோஷலிசமும் பாட்டாளி வர்க்க சோஷலிசமும்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: நா. தர்மராஜன், எம். ஏ.

**В. И. Ленин**
Мелкобуржуазный и пролетарский социализм
*на тамильском языке*

**V. I. Lenin**
Petty-bourgeois and Proletarian Socialism
*in Tamil*

முதலாவது பதிப்பு 1983
இரண்டாவது பதிப்பு 1987

© தமிழ் மொழிபெயர்ப்பு,
முன்னேற்றப் பதிப்பகம், 1983

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{0101020000-351}{014(01)-87}$ без объявления

பலவிதமான சோஷலிஸ்ட் போதனைகளுக்கிடையே ஐரோப்பாவில் இப்பொழுது மார்க்சியம் மேலோங்கியிருக்கிறது; ஒரு சோஷலிஸ்ட் அமைப்பை அடைவதற்கான போராட்டம் அநேகமாக முழுவதுமே சமூக-ஜனநாயகக் கட்சிகளின் வழிகாட்டுதலின்படி தொழிலாளி வர்க்கம் நடத்தும் போராட்டமாகவே இருக்கிறது. மார்க்சிய போதனையில் வேரூன்றிய பாட்டாளி வர்க்க சோஷலிசம் இப்படி முழுமையாக மேலாதிக்கம் செலுத்துகின்ற நிலை ஒரே வீச்சில் ஏற்பட்டுவிடவில்லை; எல்லாவிதமான செல்லரித்துப் போன தத்துவங்கள், குட்டி முதலாளித்துவ சோஷலிசம், அராஜகவாதம் இன்னும் மற்றவைகளுக்கும் எதிராக நீண்ட போராட்டத்துக்குப் பிறகுதான் ஏற்பட்டது. முப்பது வருடங்களுக்கு முன்பு ஜெர்மனியில் கூட மார்க்சியம் மேலோங்கியிருக்கவில்லை; அந்த சமயத்தில் அங்கே நிலவிய கருத்துக்கள் உண்மையில் மாறும் தன்மை கொண்டவையாக, கலப்பாக, பல்திரட்டாக குட்டி முதலாளித்துவ சோஷலிசத்துக்கும் பாட்டாளி வர்க்க சோஷலிசத்துக்கும் இடையிலே இருக்கின்றவையாக இருந்தன. பிரான்ஸ், ஸ்பெயின், பெல்ஜியம் ஆகிய ரொமான் நாடுகளில் முன்னணியிலுள்ள தொழிலாளர்கள் மத்தியில் மிகவும் அதிகமான அளவுக்குப் பரவியிருந்த தத்துவங்கள் புருதோனியவாதம், பிளாங்கிவாதம்[1] மற்றும் அராஜகவாதமுமே; இவை பாட்டாளி வர்க்கத்தின் கருத்தை எடுத்துரைக்கவில்லை, குட்டி முதலாளித்துவக் கருத்தையே எடுத்துரைத்தன என்பது தெளிவாகும்.

கடந்த சில பத்தாண்டுகளில் மார்க்சியம் இப்படி வேகமாகவும் முழுமையாகவும் வெற்றியடைந்த காரணம் என்ன? மார்க்சியக் கருத்துக்கள் சரியானவை என்பதை நம்



2-01528

காலத்திய சமூகங்களின் வளர்ச்சி அனைத்தும் (அரசியல், பொருளாதாரம் ஆகிய இரண்டிலுமே), புரட்சிகர இயக்கம் மற்றும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் போராட்டத்தின் மொத்த அனுபவமும் மென்மேலும் அதிகமாக நிரூபிக்கின்றன. குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் நலிவு எல்லாவித மான குட்டி முதலாளித்துவத் தப்பெண்ணங்களையும் அழிப்பதை நோக்கி—சீக்கிரமாகவோ அல்லது தாமதமாகவோ—தவிர்க்க முடியாத வகையில் இட்டுச் சென்றது; அதே பொழுதில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியும் முதலாளித்துவ சமூகத்திற்குள் வர்க்கப் போராட்டம் தீவிரமடைவதும் பாட்டாளி வர்க்க சோஷலிசத்தின் கருத்துக்களுக்கு ஆதரவான மிகச் சிறந்த கிளர்ச்சிப் பிரச்சாரமாக இருந்தன.

காலாவதியான பல்வகையான சோஷலிஸ்ட் தத்துவங்கள் நம் நாட்டில் உறுதியான வகையில் இடம் பிடித்துக் கொண்டதற்கு ருஷ்யாவின் பின்தங்கிய நிலைமை இயல்பான காரணமாக இருக்கிறது. கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் ருஷ்யப் புரட்சிச் சிந்தனையின் மொத்த வரலாறுமே குட்டி முதலாளித்துவ நரோட்னிக்[2] சோஷலிசத்துக்கு எதிராக மார்க்சியம் நடத்திய போராட்டத்தின் வரலாறாக இருக்கிறது. ருஷ்யத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வேகமான வளர்ச்சியும் குறிப்பிடத்தக்க வெற்றிகளும் ருஷ்யாவிலும் கூட மார்க்சியத்துக்கு முன்பே வெற்றியைக் கொண்டுவந்த போதிலும், புரட்சிகர விவசாய இயக்கம் சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் — குறிப்பாக 1902ம் வருடத்தில் உக்ரேனியாவில் ஏற்பட்ட பிரபலமான விவசாயக் கலகங்களுக்குப்[3] பிறகு—அடைந்திருக்கும் வளர்ச்சி மறு பக்கத்தில் முதுமைத்தளர்ச்சியடைந்த நரோடியவாதத்துக்கு ஒரு வகையில் புத்துயிரூட்டக் காரணமாக இருந்திருக்கிறது. சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்[4] என்று சொல்லப்படுபவர்களின் அசல் சித்தாந்தக் கடைச்சரக்கு எல்லாமே புதுப்பாங்கான ஐரோப்பிய சந்தர்ப்பவாதத்தால் (திருத்தல்வாதம், பெர்ன்ஷ்டைன்வாதம்[5] மற்றும் மார்க்சை விமர்சனம் செய்தல்) அழகுபடுத்தப்பட்ட பழைய நரோடியவாதக் கொள்கைகளே. ஆகவேதான் பரிசுத்த நரோட்னிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் ஆகிய இருவரோடும்

மார்க்சியவாதிகளின் கருத்துமாறுபாடுகளில் விவசாயப் பிரச்சினை குவிமையமாக இருக்கிறது.

நரோடியவாதம் ஓரளவுக்கு ஒருங்கிணைப்பான, முரணில்லாத தத்துவமாகும். அது ருஷ்யாவில் முதலாளித்துவம் ஆதிக்கம் செலுத்தும் என்பதை மறுத்தது; மொத்த பாட்டாளி வர்க்கத்தின் முன்வரிசைப் போர்வீரர்களாக தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் வகிக்கும் பாத்திரத்தை அது மறுத்தது; அரசியல் புரட்சி மற்றும் முதலாளித்துவ அரசியல் சுதந்திரம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அது மறுத்தது; விவசாய கம்யூன், அதன் வேளாண்மையின் அற்ப மான வடிவங்களிலிருந்து உடனடியான சோஷலிஸ்ட் புரட்சி ஏற்பட வேண்டும் என்று அது போதித்தது. இந்த ஒருங்கிணைப்பான தத்துவத்தில் இன்று எஞ்சியிருப்பவை சில கந்தல் துணுக்குகள் மட்டும்தான். ஆனால் இன்றைய கருத்துமாறுபாடுகளை மதிநுட்பத்தோடு புரிந்து கொள்ள வேண்டுமென்றால், இவை தெருச் சண்டைகளைப் போலத் தரம் குறைவதைத் தடுக்க வேண்டுமென்றால், நமது சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் தவறுகளின் பொதுவான மற்றும் அடிப்படையான நரோடியவாத வேர்களை ஒருவர் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

நரோட்னிக்குகள் விவசாயியை ருஷ்யாவின் எதிர்காலத்தைப் படைக்கப் போகும் மனிதனைக் கருதினார்கள்; விவசாயக் கம்யூனின் சோஷலிஸ்ட் தன்மையில் அவர்களுடைய நம்பிக்கையிலிருந்து, முதலாளித்துவத்தின் எதிர்காலத்தில் அவர்களுடைய நம்பிக்கையின்மையிலிருந்து இந்தக் கருத்து தவிர்க்க முடியாத விதத்தில் தோன்றியது. மார்க்சியவாதிகள் தொழிலாளியை ருஷ்யாவின் எதிர்காலத்தைப் படைக்கப் போகும் மனிதனைக் கருதினார்கள். விவசாயத்திலும் தொழில்துறையிலும் ருஷ்ய முதலாளித்துவத்தின் வளர்ச்சி அவர்களுடைய கருத்துக்களை மென்மேலும் நிரூபித்து வருகிறது. ருஷ்யாவில் தொழிலாளி வர்க்க இயக்கம் தனக்குரிய அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டது. ஆனால் விவசாய இயக்கத்தைப் பொறுத்தவரை, நரோடியவாதத்தையும் மார்க்சியத்தையும் பிரிக்கின்ற இடைவெளி இந்த இயக்கத்தைப் பற்றி அவர்களுடைய வெவ்வேறான விளக்கங்களில் இன்று வரையிலும் வெளிப்பட்டிருக்கிறது. விவசாய இயக்கம்

மார்க்சியத்துக்கு மறுப்புக் கூறுவதாக நரோட்னிக்குகள் நினைக்கிறார்கள்; அது நேரடியான சோஷலிஸ்ட் புரட்சிக்காக நிற்கும் இயக்கம்; அது முதலாளித்துவ அரசியல் சுதந்திரத்தை அங்கீகரிக்கவில்லை; அது சிறிய அளவிலிருக்கும் உற்பத்தியிலிருந்து தோன்றுவது, பெரிய அளவு உற்பத்தியில் அல்ல. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், நரோட்னிக்குக்கு விவசாய இயக்கம் தான் மெய்யான, உண்மையிலேயே சோஷலிஸ்ட், உடனடியான சோஷலிஸ்ட் இயக்கம். விவசாயக் கம்யூனில் நரோட்னிக்குகள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் அராஜகவாதத்தின் நரோடியவாதரகமும் இத்தகைய முடிவுகள் எவ்விதம் தவிர்க்க முடியாதவை என்பதை முழுமையாக விளக்குகின்றன.

மார்க்சியவாதிக்கு விவசாய இயக்கம் ஜனநாயக இயக்கமே தவிர, சோஷலிஸ்ட் இயக்கம் அல்ல. மற்ற நாடுகளில் ஏற்பட்டதைப் போலவே ருஷ்யாவிலும் அது சமூக-பொருளாதார உள்ளடக்கத்தில் முதலாளித்துவத் தன்மையைக் கொண்டிருக்கும் ஜனநாயகப் புரட்சியின் அவசியமான துணைப் பொருளாகும். அது முதலாளித்துவ அமைப்பின் அடிப்படைகளுக்கு எதிராக, பண்ட உற்பத்தி அல்லது மூலதனத்துக்கு எதிராகச் சிறிதளவுக்குக் கூட செலுத்தப்பட்டதல்ல. அதற்கு மாறாக அது கிராமப்பகுதிகளில் நிலவுகின்ற பழைய பண்ணையடிமை, முதலாளித்துவத்துக்கு முற்பட்ட உறவுகளுக்கும் பண்ணையடிமை உடைமையின் எச்சங்கள் அனைத்துக்கும் ஆதார சக்தியான நிலப்பிரபுத்துவ உடைமை முறைக்கும் எதிராகச் செலுத்தப்படுவதாகும். ஆகவே இந்த விவசாய இயக்கத்தின் முழு வெற்றி முதலாளித்துவத்தை ஒழிக்காது. அதற்கு மாறாக, முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு அதிக விரிவான அடிப்படையை ஏற்படுத்தும், கலப்பற்ற முதலாளித்துவ வளர்ச்சியை விரைவுபடுத்தித் தீவிரமாக்கும். விவசாய எழுச்சியின் முழு வெற்றி ஒரு ஜனநாயக முதலாளித்துவக் குடியரசுக்கு உறுதியான கோட்டையை மட்டுமே ஏற்படுத்தும்; அதற்குள் முதலாளி வர்க்கத்துக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டம் அதன் கலப்பற்ற வடிவத்தில் முதன்முறையாக வளர்ச்சி அடையும்.

ஆகவே சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுக்கும் சமூக-ஜன

நாயகவாதிகளுக்கும் இடையே கோட்பாட்டளவில் உள்ள இடைவெளியை ஆராய விரும்புகின்ற எவருமே இந்த இரண்டு வேறுபட்ட கருத்துக்களையும் தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியம். ஒரு கருத்தின்படி விவசாய இயக்கம் சோஷலிஸ்ட் இயக்கம்; மறு கருத்தின்படி அது ஜன நாயக-முதலாளித்துவ இயக்கம். எனவே மரபு வழுவாத மார்க்சியவாதிகள் விவசாயப் பிரச்சினையைப் ''புறக்கணித்து விட்டார்கள்'' என்று நமது சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் நூருவது தடவையாகத் திரும்பச் சொல்லும் பொழுது (உதாரணமாக, புரட்சிகர ருஷ்யா, எண் 75ஐப் படிக்கவும்) யாரும் அவர்களுடைய முட்டாள்தனத்தைக் காண முடியும். இத்தகைய முழு முட்டாள்தனத்தை எதிர்த்துப் போராடுவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அது அரிச்சுவடியைத் திரும்பச் சொல்வதே; பழைய முரணில்லாத நரோடியவாதக் கருத்துக்களை எடுத்துக் கூறி நமக்கிடையே உள்ள உண்மையான வேறுபாடு விவசாயப் பிரச்சினையைக் கணக்கிலெடுத்துக் கொள்வதில் விருப்பம் காட்டுவதிலோ அல்லது விருப்பம் காட்டாதிருப்பதிலோ, அதை அங்கீகரிப்பதிலோ அல்லது அங்கீகரிக்கத் தவறுவதிலோ அடங்கியிருக்கவில்லை, ருஷ்யாவில் இன்றைய விவசாய இயக்கம் மற்றும் இன்றைய விவசாயப் பிரச்சினை பற்றிய நமது வேறுபட்ட மதிப்பிடுகளில் தான் இருக்கிறது என்பதை நூருவது, ஆயிரமாவது தடவையாகச் சுட்டிக் காட்டுவதே. மார்க்சியவாதிகள் ருஷ்யாவில் விவசாயப் பிரச்சினையைப் ''புறக்கணிக்கிருர்கள்'' என்று சொல்கின்ற நபர் முதலாவதாக, முழு முட்டாளாக இருக்க வேண்டும். ஏனென்ருல் பிளெஹானவ் எழுதிய நமது வேறுபாடுகள் (இது இருபது வருடங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டது) என்ற பிரசுரத்திலிருந்து தொடங்கி ருஷ்ய மார்க்சியவாதிகளின் முக்கியமான எழுத்துக்கள் அனைத்துமே பிரதானமாக ருஷ்ய விவசாயப் பிரச்சினையில் நரோடியவாதக் கருத்துக்களின் தவறுகளை விளக்குவதற்காகவே எழுதப்பட்டிருக்கின்றன. இரண்டாவதாக, மார்க்சியவாதிகள் விவசாயப் பிரச்சினையைப் ''புறக்கணிக்கிருர்கள்'' என்று சொல்பவர் அதன்மூலம் கோட்பாட்டளவில் உள்ள உண்மையான வேறுபாட்டை முழுமையாக மதிப்பீடு செய்வதை, இன்றைய விவசாய

இயக்கம் ஜனநாயக-முதலாளித்துவ இயக்கமா இல்லையா, யதார்த்தரீதியில் பண்ணையடிமை முறையின் எச்சங்களுக்கு எதிராக அது செலுத்தப்படுகிறதா, இல்லையா என்ற கேள்விக்குப் பதில் கூறுவதைத் தவிர்க்க விரும்புகிறார் என்பதை நிரூபிக்கிறார்.

இந்தக் கேள்விக்குத் தெளிவான, துல்லியமான பதிலை சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் ஒரு போதும் கொடுத்ததில்லை, எந்தக் காலத்திலும் கொடுக்க முடியாது. ஏனென்றால் அவர்கள் ருஷ்யாவில் விவசாயப் பிரச்சினையைப் பற்றிய பழைய நரோடியவாதக் கருத்துக்கும் இன்றைய மார்க்சியக் கருத்துக்கும் இடையில் பரிதாபகரமான முறையில் தடுமாறுகிறார்கள். தங்களிடமிருக்கும் குட்டி முதலாளித்துவ பிரமைகள், விவசாய இயக்கத்தை மதிப்பீடு செய்வதில் நரோடியவாதக் கற்பனைகள் ஆகியவற்றை அவர்கள் அகற்ற முடியவில்லை என்ற காரணத்தால் சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் குட்டி முதலாளித்துவக் கருத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் (அவர்கள் குட்டி முதலாளித்துவச் சித்தாந்திகள்) என்று மார்க்சியவாதிகள் கூறுகிறார்கள்.

அதனால்தான் நாம் அரிச்சுவடிக்கு மறுபடியும் போக வேண்டியிருக்கிறது. ருஷ்யாவில் இன்றைய விவசாய இயக்கம் எதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது? நிலத்துக்கும் விடுதலைக்கும்.—இந்த இயக்கத்தின் முழுமையான வெற்றி எத்தகைய முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கும்? விடுதலையைச் சாதித்த பிறகு அரசின் நிர்வாகத்தில் நிலப்பிரபுக்கள் மற்றும் அதிகார வர்க்கத்தினருடைய ஆட்சியை அது ஒழிக்கும். நிலத்தை எடுத்துக் கொண்டபிறகு நிலப்பிரபுக்களின் பண்ணைகள் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும்.—மிக அதிகமான சுதந்திரமும் நிலப்பிரபுக்களின் உடைமைகள் பறிமுதல் செய்யப்படுவதும் பண்ட உற்பத்தியை ஒழிக்குமா? இல்லை, அது ஒழிக்காது.—மிக அதிகமான சுதந்திரமும் நிலப்பிரபுக்களின் உடைமைகள் பறிமுதல் செய்யப்படுவதும் பொது நிலத்தில் அல்லது ''சமூகமயமாக்கப்பட்ட'' நிலத்தில் விவசாயக் குடும்பங்கள் தனிப்பட்ட முறையில் விவசாயம் செய்வதை ஒழிக்குமா? இல்லை, அது ஒழிக்காது.—மிக அதிகமான சுதந்திரமும் நிலப்பிரபுக்களின் உடைமைகள் பறிமுதல் செய்யப்படு

வதும் எண்ணற்ற குதிரைகளும் மாடுகளும் வைத்திருக்கும் பணக்கார விவசாயியையும் பண்ணையாளையும், தொழிலாளியையும் பிரிக்கின்ற அகன்ற இடைவெளியை, அதாவது விவசாய முதலாளியை விவசாயப் பாட்டாளியிடமிருந்து பிரிக்கின்ற இடைவெளியை இணைப்பதற்குப் பாலம் ஏற்படுத்துமா? இல்லை, அது ஏற்படுத்தாது. அதற்கு மாருக, மிக உயர்ந்த சமூகப் பிரிவு (நிலப்பிரபுக்கள்) எவ்வளவு அதிகமான அளவுக்கு முழுமையாக முறியடிக்கப்பட்டு அழிக்கப்படுகிருர்களோ, அந்த அளவுக்கு முதலாளி வர்க்கத்தினருக்கும் பாட்டாளி வர்க்கத்தினருக்குமிடையே வர்க்க வேறுபாடுகள் அதிக ஆழமானதாக இருக்கும்.—விவசாயிகள் எழுச்சியின் முழு வெற்றியின் யதார்த்தரீதியான முக்கியத்துவம் எப்படி இருக்கும்? இந்த வெற்றி பண்ணையடிமை முறையின் எல்லா எச்சங்களையும் ஒழித்து விடும்; ஆனல் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பை அது நிச்சயமாக ஒழிக்காது, முதலாளித்துவத்தையோ, பணக்காரர், ஏழைகள், முதலாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கம் என்ற வகையில் சமூகத்திலுள்ள வர்க்கப் பிரிவினைகளையோ அது ஒழிக்காது.—இன்றைய விவசாய இயக்கத்தை ஜனநாயக-முதலாளித்துவ இயக்கம் என்று ஏன் சொல்கிருேம்? ஏனென்ருல் அதிகார வர்க்கம் மற்றும் நிலப்பிரபுக்களின் ஆட்சியை ஒழித்த பிறகு அது சமூகத்தில் ஜனநாயக அமைப்பை ஏற்படுத்தும். ஆனல் அந்த ஜனநாயக சமூகத்தின் முதலாளித்துவ அடிப்படையை மாற்ருது, மூலதனத்தின் ஆதிக்கத்தை ஒழிக்காது.—வர்க்க உணர்வு படைத்த தொழிலாளி, சோஷலிஸ்ட் இன்றைய விவசாய இயக்கத்தை எப்படிக் கருத வேண்டும்? அவர் இந்த இயக்கத்தை ஆதரிக்க வேண்டும், மிகவும் சுறுசுறுப்பான வகையில் விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும்; அதிகார வர்க்கம், நிலப்பிரபுக்கள் ஆகிய இருவருடைய ஆட்சியையுமே அவர்கள் முழுமையாகத் தூக்கியெறிவதற்கு உதவி செய்ய வேண்டும். எனினும் அதே சமயத்தில் அதிகார வர்க்கம் மற்றும் நிலப்பிரபுக்களின் ஆட்சியைத் தூக்கியெறிவது மட்டும் போதுமானதல்ல என்பதை அவர் விவசாயிகளுக்கு விளக்கிக் கூற வேண்டும். அந்த ஆட்சியை ஒழிக்கும் பொழுது, அதே சமயத்தில் மூலதனத்தின் ஆட்சியை, முதலாளி வர்க்

கத்தின் ஆட்சியை ஒழிப்பதற்கும் அவர்கள் தயாரிப்புச் செய்ய வேண்டும். அதை நிறைவேற்ற முழுமையான சோஷலிஸ்ட், அதாவது மார்க்சியத் தத்துவத்தை உடனடியாகப் பரப்ப வேண்டும். கிராமப்புறப் பாட்டாளி வர்க்கத்தினரை ஒன்றுசேர்த்து உருக்குப் போல இணைத்து விவசாய முதலாளிகளுக்கும் ருஷ்ய முதலாளி வர்க்கம் முழுவதற்கும் எதிரான போராட்டத்துக்காக ஸ்தாபனரீதியாகத் திரட்ட வேண்டும்.—வர்க்க உணர்வு படைத்த ஒரு தொழிலாளி சோஷலிஸ்ட் போராட்டத்தை முக்கியமாகக் கருதி ஜன நாயகப் போராட்டத்தை மறக்க முடியுமா? அல்லது பின்னதற்காக முன்னதை மறக்க முடியுமா? இல்லை, இந்த இரண்டு போராட்டங்களுக்கும் இடையிலுள்ள உறவைப் புரிந்துகொண்டிருப்பதனால்தான் வர்க்க உணர்வு படைத்த தொழிலாளி தன்னை சமூக-ஜனநாயகவாதி என்று கூறுகிறார். சோஷலிசத்துக்கு ஜனநாயகவாதத்தின் மூலமாக, அரசியல் சுதந்திரத்தின் மூலமாகச் செல்லும் பாதையைத் தவிர வேறு எந்தப் பாதையும் கிடையாது என்பது அவருக்குத் தெரியும். எனவே இறுதி லட்சியமாகிய சோஷலிசத்தை அடைவதற்கு ஜனநாயகவாதத்தை முழுமையாகவும் முரணில்லாதபடியும் சாதிப்பதற்கு அவர் பாடுபடுகிறார்.—ஜனநாயகப் போராட்டத்துக்கான நிபந்தனைகள் சோஷலிசப் போராட்டத்துக்கான நிபந்தனைகளைப் போல அதே மாதிரியாக இல்லாதது ஏன்? இந்த இரண்டு போராட்டங்களில் ஒவ்வொன்றிலும் தொழிலாளர்கள் வெவ்வேறு நேச சக்திகளைக் கொண்டிருப்பது நிச்சயம் என்பதனால்தான். தொழிலாளர்கள் முதலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியோடு, குறிப்பாக, குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரோடு சேர்ந்து ஜனநாயகப் போராட்டத்தை நடத்துகிறார்கள். மறு பக்கத்தில் சோஷலிஸ்ட் போராட்டத்தை மொத்த முதலாளி வர்க்கத்துக்கும் எதிராகத் தொழிலாளர்கள் நடத்துகிறார்கள். அதிகார வர்க்கத்தினருக்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிரான போராட்டத்தை, எல்லா விவசாயிகளையும் வசதியுள்ளவர்கள் மற்றும் நடுத்தர விவசாயிகளையும் கூடச் சேர்த்து நடத்த முடியும், அவ்வாறுதான் நடத்த வேண்டும். மறு பக்கத்தில் முதலாளி வர்க்கத்துக்கு எதிரான,

ஆகவே வசதியுள்ள விவசாயிகளுக்கும் எதிரான போராட்டத்தைக் கிராமப்புறப் பாட்டாளி வர்க்கத்தின் துணையோடு மட்டுமே சரிவர நடத்த முடியும்.

இந்த அடிப்படையான மார்க்சிய உண்மைகளை—சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் இவற்றைப் பற்றிச் சிந்திப்பதை எப்பொழுதுமே தவிர்க்க முற்படுகிறார்கள்—நாம் மனதில் கொண்டால் மார்க்சியத்துக்கு அவர்களுடைய ''மிகச் சமீபத்திய'' மறுப்புக்களை மதிப்பீடு செய்வதில் நமக்கு எத்தகைய சிரமமும் இருக்காது. பின்வரும் உதாரணத்தைப் பார்ப்போம்.

''நிலப்பிரபுவுக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கத்தை எடுத்த எடுப்பிலேயே ஆதரிப்பதற்குப் பதிலாக முதலில் நிலப்பிரபுவுக்கு எதிராக விவசாயியைப் பொதுவான முறையில் ஆதரிப்பதற்கும் அதன் பிறகு (அதாவது அதே சமயத்தில்) பொதுவான முறையில் விவசாயிக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கத்தை ஆதரிப்பதற்கும் என்ன அவசியம் இருந்தது? இதற்கும் மார்க்சியத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறதென்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம்'' என்று புரட்சிகர ருஷ்யா (எண் 75) கேட்கிறது.

இது மிகவும் பூர்விகமான, குழந்தை மாதிரியான வெகுளித்தனமான அராஜகவாதத்தின் கருத்து நிலையாகும். மனித குலம் பல நூற்றாண்டுகளாக, ஆயிரக்கணக்கான வருடங்களாகக் கூட எல்லாச் சுரண்டலையும் அதன் ஒவ்வொரு வகையையும் ''உடனே'' ஒழித்துவிட வேண்டுமென்று கனவு கண்டு வந்திருக்கிறது. உலக முழுவதிலும் உள்ள சுரண்டப்படுகின்ற கோடிக்கணக்கான மக்கள் முதலாளித்துவ சமூகத்தை அதன் பரிணாமம் இயற்கையாகவே கொண்டு செல்கின்ற திசையில் மாற்றுவதற்காக முரணில்லாத, உறுதியான, எல்லாவற்றையும் தழுவிய போராட்டத்துக்காக ஒன்று சேரத் தொடங்கும் வரையிலும் இத்தகைய கனவுகள் கனவுகளாக மட்டுமே இருந்தன. மார்க்சின் விஞ்ஞான சோஷலிசம் மாற்றத்துக்கான உந்துதலை ஒரு திட்டவட்டமான வர்க்கத்தின் போராட்டத்தோடு இணைத்தபொழுதுதான் சோஷலிஸ்ட் கனவுகள் கோடிக்கணக்கான மக்களின் சோஷலிஸ்ட் போராட்டமாக மாறின. வர்க்கப் போராட்டத்

துக்கு வெளியே சோஷலிசம் என்பது பொருளற்ற சொற்றெடராக அல்லது வெகுளித்தனமான கனவாகத்தான் இருக்கும், எனினும் ருஷ்யாவில் வெவ்வேருன இரண்டு சமூக சக்திகளின் வெவ்வேருன இரண்டு போராட்டங்கள் நம் கண்களுக்கு முன்பாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ (அவை விவசாய கம்யூனிலும், அதாவது சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் கருத்துநிலையில் நூறு சதவிகிதம் ''சமூகமயமாக்கப்பட்ட'' நிலத்திலும் இருக்கின்றன என்பதை அவர்கள் அறிந்துகொள்ளட்டும்) அங்கெல்லாம் பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறது. சிறு நிலவுடைமையாளர்கள், குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரைக் கொண்ட சமூகப் பகுதி என்ற முறையில் விவசாயிகள் பண்ணையடிமை முறையின் எல்லாவிதமான எச்சங்களுக்கும் எதிராக, அதிகார வர்க்கத்தினர் மற்றும் நிலப்பிரபுக்களுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கின்றனர். அரசியல் பொருளாதாரத்தையும் உலக முழுவதிலும் புரட்சிகளின் வரலாற்றையும் பற்றி எதுவுமே தெரியாதவர்கள் மட்டும்தான் இவை இரண்டும் தனி வகையான, வெவ்வேருன சமூகப் போர்கள் என்பதைப் பார்க்கத் தவறுவார்கள். ''உடனே'' நடைபெற வேண்டும் என்று வற்புறுத்துவதன் மூலம் இந்தப் போர்களின் வெவ்வேருன தன்மையைப் பார்க்காமல் கண்களை மூடிக் கொள்வது யதார்த்தத்தைப் பற்றி எத்தகைய ஆராய்ச்சியும் செய்ய மறுத்து சிறகின் கீழ் தலையை மறைத்துக் கொள்வதைப் போன்றதாகும்.

பழைய நரோடியவாதக் கருத்துக்களின் நேர்மையை இழந்துவிட்ட சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், நரோட்னிக்குகளின் போதனைகள் பலவற்றைக்கூட மறந்து விட்டார்கள். அதே புரட்சிகர ருஷ்யா அதே கட்டுரையில் பின்வருமாறு எழுதுகிறது. ''நிலப்பிரபுக்களின் உடைமைகளைப் பறிமுதல் செய்வதற்கு விவசாயிகளுக்கு உதவி செய்வதன் மூலம், முதலாளித்துவ விவசாயத்தின் அநேகமாக வளர்ச்சியடைந்த வடிவங்களின் அழிவுகளின் மீது குட்டி முதலாளித்துவப் பொருளாதாரத்தைக் கட்டுவதற்குத் திரு. லெனின் சுய உணர்வில்லாமலேயே உதவி செய்கிருர். மரபு

வழுவாத மார்க்சியத்தின் நிலையிலிருந்து இது ஒரு அடி பின் வாங்குவது ஆகாதா?''

கனவான்களே, உங்களுக்கு வெட்கமில்லையா? உங்களைச் சேர்ந்த திரு. வி.வி.யைக் கூட நீங்கள் மறந்து விட்டீர்களா? அவர் எழுதிய முதலாளித்துவத்தின் விதி, திரு. நிக்கலாய் எழுதிய காட்சிகள்[6], இன்னும் உங்களுடைய அறிவின் பிறப்பிடங்களைப் புரட்டிப் பாருங்கள். ருஷ்யாவில் நிலப்பிரபுத்துவ விவசாயம் முதலாளித்துவம், பண்ணையடிமை முறை ஆகியவற்றின் கூறுகளைத் தனக்குள் இணைத்துக் கொண்டிருக்கிறது என்பது அப்பொழுது உங்கள் நினைவுக்கு வரும். உழைப்புக் குத்தகையை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதார அமைப்பு இருக்கிறது; அது விவசாயிகளை இலவசமாக உழைக்குமாறு கட்டாயப்படுத்தும் பழைய அமைப்பின் நேரடியான எச்சம் என்பதை நீங்கள் கண்டு பிடிப்பீர்கள். மேலும் மார்க்சின் மூலதனத்தின் மூன்றும் தொகுதியைப்[7] போன்ற மரபு வழுவாத ஒரு மார்க்சியப் புத்தகத்தைப் படித்துப் பார்க்கும் முயற்சியை நீங்கள் செய்தால், அந்த இலவச உழைப்பு முறையானது குட்டி முதலாளித்துவ விவசாய முறை என்ற ஊடகத்தின் வழியாக அல்லாமல் முதலாளித்துவ விவசாயமாக மாற்றமடைய ஒரு இடத்திலும் அது வளர முடியவில்லை, ஒரு இடத்திலும் வளரவில்லை என்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். மார்க்சியம் உபயோகமற்றது என்று நிரூபிப்பதற்காக நீங்கள் மிகப் பூர்விகமான முறைகளை, என்றைக்கோ அம்பலப் படுத்தப்பட்ட முறைகளைத் தஞ்சமடைகிறீர்கள். இலவச உழைப்பு முறை என்ற அமைப்பைக் கொண்ட பெரிய அளவு விவசாய முறையை அடுத்து பெரிய அளவு முதலாளித்துவ விவசாயம் நேரடியாகவே ஏற்பட்டு விட்டது என்ற பொருந்தாத, மிகை எளிமையான கருதுகோளை மார்க்சியத்தின் மீது ஏற்றிச் சொல்கிறீர்கள்! நிலப்பிரபுக்களுடைய பண்ணைகளின் உற்பத்தி விவசாயிகளுடைய நிலங்களிலிருந்து கிடைக்கும் உற்பத்தியைக் காட்டிலும் அதிகமாக இருக்கின்றபடியால் நிலப்பிரபுக்களின் உடைமைகளைப் பறிமுதல் செய்தது பிற்போக்கான நடவடிக்கை என்று வாதாடுகிறீர்கள். இந்த வாதம் நான்காவது படிவத்தில் படிக்கின்ற மாணவனுக்கே தகும். கனவான்களே! சற்று

நினைத்துப் பாருங்கள். பண்ணையடிமை முறையை ஒழித்த பொழுது அதிகமான உற்பத்தியைக் கொண்ட நிலப்பிரபுக் களின் பண்ணைகளிலிருந்து குறைவான உற்பத்தியைக் கொண்ட விவசாயிகளின் நிலங்களைப் பிரித்தது ''பிற்போக் கான'' நடவடிக்கையா என்பதை நினைத்துப் பாருங்கள்.

ருஷ்யாவின் இன்றைய நிலப்பிரபுத்துவப் பொருளா தாரம் முதலாளித்துவம், பண்ணையடிமை முறை ஆகிய இரண் டின் கூறுகளையும் இணைத்துக் கொண்டிருக்கிறது. நிலப்பிர புக்களுக்கு எதிராக இன்று விவசாயிகள் நடத்தும் போராட் டம் பண்ணையடிமை முறையின் எச்சங்களுக்கு எதிரான போராட்டம் என்பது யதார்த்தமாகும். எனினும் எல்லா தனிப்பட்ட இனங்களையும் கணக்கிடுவதற்கும் ஒவ்வொரு தனிப்பட்ட இனத்தையும் சீர்தூக்கிப் பார்க்கவும் மருந்து வியாபாரியின் தராசின் துல்லியத்தோடு பண்ணையடிமை முறை எங்கே முடிகிறது, கலப்பற்ற முதலாளித்துவம் எங்கே தொடங்குகிறது என்பதைச் சரியாக நிறுவுவதற் கும் முயற்சிப்பது ஒருவருடைய ஏட்டுப்படிப்பை மார்க்சிய வாதிகளின் மீது சுமத்துவதாகும். ஒரு சிறு கடைக்கார ரிடமிருந்து நாம் வாங்கிய சாமான்களின் விலையில் எந்த அளவு உழைப்பின் மதிப்பைப் பிரதிநிதித்துவப்படுத்து கிறது, எந்தப் பகுதி மோசடி, இதரவைகளைப் பிரதிநிதித் துவப்படுத்துகிறது என்று நாம் கணக்கிட்டுப் பார்க்க முடி யாது. கனவான்களே! அப்படியானால் நாம் உழைப்பளவை மதிப்புத் தத்துவத்தைக் கைவிட வேண்டும் என்பது இதற்கு அர்த்தமா?

நம் காலத்திய நிலப்பிரபுத்துவ பொருளாதாரம் முத லாளித்துவம், பண்ணையடிமை முறை ஆகிய இரண்டின் கூறுகளையும் இணைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இதிலி ருந்து ஒவ்வொரு குறிப்பிட்ட உதாரணத்திலும் ஒவ்வொரு அற்பமான கூறையும் நிறுப்பதும் கணக்கிடுவதும் பிரதி யெடுப்பதும் அதை ஏதாவதொரு சமூக இனமாகப் பிரித்துப் பெட்டியில் அடைப்பதும் நம்முடைய கடமை என்று புத்தகப் படிப்பாளிகள் மட்டுமே முடிவு செய்வார்கள். இரண்டு வெவ்வேறான சமூகப் போர்களுக்கும் இடையே நாம் வேறுபடுத்திப் பார்க்க வேண்டிய ''அவசியம் கிடை யாது'' என்று கற்பனாவாதிகள் மட்டும்தான் முடிவு செய்

வார்கள். நம்முடைய செயல் திட்டம், செயல் தந்திரம் ஆகிய இரண்டிலும் நாம் முதலாளித்துவத்துக்கு எதிரான கலப்பற்ற பாட்டாளி வர்க்கப் போராட்டத்தைப் பண்ணையடிமை முறைக்கு எதிரான பொதுவான ஜனநாயக (மற்றும் பொதுவான விவசாயப்) போராட்டத்தோடு இணைக்க வேண்டும் என்ற உண்மையான முடிவு ஒன்று மட்டுமே இதிலிருந்து ஏற்படும்.

இன்றுள்ள நிலப்பிரபுத்துவ அரை பண்ணையடிமைப் பொருளாதாரத்தில் முதலாளித்துவக் கூறுகள் எவ்வளவு அதிகக் கூர்மையாக இருக்கின்றனவோ, அந்த அளவுக்கு கிராமப்புறப் பாட்டாளி வர்க்கத்தைத் தனியான முறையில் ஸ்தாபன ரீதியாகத் திரட்டுவது அதிக அவசரமானதாகும். ஏனென்ருல் பறிமுதல்கள் நடைபெறும் பொழுது கலப்பற்ற முதலாளித்துவ அல்லது கலப்பற்ற பாட்டாளி வர்க்க முரணியல்புகள் சீக்கிரமாகவே தம்மை உறுதியாக வெளிப்படுத்துவதற்கு இது உதவி செய்யும். நிலப்பிரபுத்துவ பொருளாதாரத்தில் முதலாளித்துவக் கூறுகள் எவ்வளவு அதிகக் கூர்மையாக இருக்கின்றனவோ அவ்வளவு சீக்கிரமாக ஜனநாயக ரீதியான பறிமுதல் சோஷலிசத்துக்கான உண்மையான போராட்டத்துக்கு உந்துதலைக் கொடுக்கும். ஆகவே ''சமூகமயமாக்குதல்'' என்ற கவர்ச்சியான சொல்லைப் பயன்படுத்தி ஜனநாயகப் புரட்சியைப் போலியான முறையில் உயர்வுபடுத்திப் பேசுவது அதிகமான அளவுக்கு ஆபத்தானதாகும். நிலப்பிரபுத்துவப் பொருளாதாரத்தில் முதலாளித்துவம் மற்றும் பண்ணையடிமை உறவுகள் கலந்திருக்கின்றன என்ற உண்மையிலிருந்து பெறக்கூடிய முடிவு இதுவே.

ஆகவே கலப்பற்ற பாட்டாளி வர்க்கப் போராட்டத்தைப் பொதுவான விவசாயப் போராட்டத்தோடு நாம் இணைக்க வேண்டும்; இரண்டையும் சேர்த்துக் குழப்பக் கூடாது. பொதுவான ஜனநாயக மற்றும் பொதுவான விவசாயப் போராட்டத்தை நாம் ஆதரிக்க வேண்டும். ஆனல் இந்த வர்க்கம் அல்லாத போராட்டத்தில் நாம் மூழ்கிவிடக் கூடாது; சமூகமயமாக்குதல் என்பதைப் போன்ற போலியான கவர்ச்சிச் சொற்களைக் கொண்டு ஒருபோதும் அதை உயர்வுபடுத்திப் பேசக் கூடாது. நகர்ப்புற மற்றும்

கிராமப்புறப் பாட்டாளி வர்க்கத்தை சமூக-ஜனநாயகத்தின் முற்றிலும் சுயேச்சையான வர்க்கக் கட்சியில் ஸ்தாபன ரீதியாகத் திரட்ட வேண்டிய அவசியத்தை என்றும் மறக்கக் கூடாது. அதிகத் தீர்மானமான உறுதியான ஜன நாயகவாதத்தை மிக அதிகமான அளவுக்கு ஆதரிக்கும் பொழுதே, பண்ட உற்பத்தி முறையின் கீழ் ''சமப்படுத்துதல்'' என்ற பரிசோதனைகள் மற்றும் பிற்போக்குத்தன மான கனவுகளின் மூலம் புரட்சிகரமான பாதையிலிருந்து விலகிச் செல்வதை இந்தக் கட்சி அனுமதிக்கக் கூடாது. நிலப்பிரபுக்களுக்கு எதிராக விவசாயிகளின் போராட்டம் இன்று ஒரு புரட்சிகரமான போராட்டமாகும். பொருளாதார மற்றும் அரசியல் பரிணாமத்தின் இன்றைய கட்டத்தில், நிலப்பிரபுக்களின் பண்ணைகளைப் பறிமுதல் செய்வது எல்லா அம்சங்களிலும் புரட்சிகரமானதாகும். இந்தப் புரட்சிகரமான ஜனநாயக நடவடிக்கைக்கு நாம் ஆதரவு கொடுக்கிறோம். எனினும் இந்த நடவடிக்கையைச் ''சமூகமயமாக்குதல்'' என்று கூறுவதும் பண்ட உற்பத்தி முறையின் கீழ் நில உடைமையில் ''சமத்துவத்தை'' ஏற்படுத்தும் சாத்தியத்தைப் பற்றி தன்னையும் மக்களையும் ஏமாற்றிக் கொள்வதும் ஒரு பிற்போக்குத்தனமான குட்டி முதலாளித்துவக் கற்பனையாகும். நாம் அதை சோஷலிஸ்டு-பிற்போக்காளர்களுக்கு விட்டுவிடுவோம்.

புரோலிட்டாரி, எண் 24,
நவம்பர் 7 (அக்டோபர் 25),
1905

நூல் திரட்டு,
தொகுதி 12,
பக்கங்கள் 39-48

# குறிப்புகள்

[1] புரூதோனியவாதம் — பிரெஞ்சு குட்டி முதலாளித்துவ சோஷலிஸ்டும் அராஜகவாதியுமான பியேர் ஜோசஃப் புரூதோன் *(1809-1865)* என்பவருடைய பெயரைக் கொண்ட சிந்தனை மரபு. புரூதோன் முதலாளித்துவ சமூகத்தைக் கூர்மையாக விமர்சித்த போதிலும், ஏழ்மை, சமத்துவமின்மை, சுரண்டல், இன்னும் முதலாளித்துவ உறவுகளின் மற்ற தீமைகளுக்கு முடிவு கட்டுவதற்கு ஒரே வழி இந்த உறவுகளை ஒழிப்பதே என்பதைப் புரிந்து கொள்ளத் தவறினார்.

பிளாங்கிவாதம்—பிரபலமான புரட்சிக்காரரும் கற்பனாவாதக் கம்யூனிசச் சிந்தனையாளருமான லுயீ ஒகுஸ்ட் பிளாங்கி *(1805-1881)* பிரெஞ்சு சோஷலிஸ்ட் இயக்கத்தில் இந்தப் போக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். அவர்களைப் பற்றி லெனின் பின்வருமாறு எழுதினார்: ''பாட்டாளி வர்க்கத்தினரின் வர்க்கப் போராட்டத்தின் மூலமாக இல்லாமல் சிறுபான்மையினரான அறிவுஜீவிகளின் சிறு குழுவினால் செய்யப்படும் சதித்திட்டத்தின் மூலம் மனிதகுலம் கூலி அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறும் என்று பிளாங்கிவாதிகள் எதிர்பார்த்தனர்.'' (V. I. Lenin, *Collected Works*, Vol. 10, p. 392.) —*3*.

[2] நரோடியவாதம் — பத்தொன்பதாம் நூற்றாண்டின் அறுபதுக்களிலும் எழுபதுக்களிலும் ருஷ்யப் புரட்சிகர இயக்கத்தில் தோன்றிய குட்டி முதலாளித்துவப் போக்கு.—*4*.

[3] *1902*ம் வருடத்தில் மார்ச் மாதக் கடைசியிலும் ஏப்ரல் மாதத் தொடக்கத்திலும் உக்ரேனியாவில் பொல்டாவா மற்றும் கார்க்கோவ் குபெர்னியாக்களைச் சேர்ந்த விவசாயிகளின் புரட்சிகரமான நடவடிக்கைகள் இங்கே குறிப்பிடப்படுகின்றன. விவசாயிகளுடைய மிகப் பரிதாப

மான நிலை பஞ்சத்தினல் படுமோசமடைந்தபடியால் அவர்கள் நிலவுடைமையாளர்களின் பண்ணைகளைத் தாக்கி உணவையும் கால்நடைத் தீவனத்தையும் கைப்பற்றினர் கள், நிலத்தைப் பகிர்ந்து தர வேண்டும் என்று கோரி ஞர்கள். விவசாயிகளின் இயக்கம் கொடூரமான முறை யில் நசுக்கப்பட்டது.—4.

[4] சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்—1901ம் வருடத்தின் கடைசி யிலும் 1902ம் வருடத்தின் தொடக்கத்திலும் ருஷ்யா வில் அமைக்கப்பட்ட குட்டி முதலாளித்துவக் கட்சி. புரட்சிகரமான ருஷ்யா (1900-05) என்ற செய்தித்தாளும் ருஷ்யப் புரட்சியின் தூதன் (1901-05) என்ற இதழும் இந்தக் கட்சியினரின் அதிகாரபூர்வமான ஏடுகளாகும். —4.

[5] பெர்ன்ஷ்டைன்வாதம் — பத்தொன்பதாம் நூற்றுண்டின் கடைசியில் சர்வதேச சமூக-ஜனநாயக இயக்கத்தில் தோன்றிய சந்தர்ப்பவாதப் போக்கு. 'ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சி மற்றும் இரண்டாம் அகிலத்தின் தீவிர வாத வலதுசாரி அணியின் தலைவரான திருத்தல்வாதி பெர்ன்ஷ்டைன் பெயர் அதற்குக் கொடுக்கப்பட்டது. பெர்ன்ஷ்டைன் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான போராட்டத்தையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத் தையும் எதிர்த்தார்; பாட்டாளி வர்க்கமும் முதலாளி வர்க்கமும் ஒத்துழைக்க வேண்டும் என்று போதித்தார். ''இயக்கமே எல்லாம்; இறுதி லட்சியம் என்பது ஒன்று மில்லை'' என்ற கேவலமான கோஷத்தைச் சொல்லி சோஷலிசத்துக்கான புரட்சிகரமான போராட்டத்துக்குப் பதிலாக முதலாளித்துவ அரசு அமைப்புக்குள் சீர்திருத் தங்களுக்குப் போராடுவதை வற்புறுத்தினர்.—4.

[6] வி.வி. — ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் விதி என்ற நூலின் ஆசிரியரான வி.பி. வோரொன்ட்ஸோவின் புனை பெயர்.

நிக்கலாய் — சீர்திருத்தத்துக்குப் பிந்திய சமூக பொரு ளாதாரக் காட்சிகள் என்ற நூலின் ஆசிரியரான என். டேனியல்ஸன் என்பவருடைய புனைபெயர். வோரொன்ட் ஸோவும் டேனியல்ஸனும் பத்தொன்பதாம் நூற்றுண் டின் எண்பதுக்களிலும் தொண்ணூறுகளிலும் மிதவாத நரோடியவாதத்தின் சித்தாந்திகளாக இருந்தனர்.—13.

[7] K. Marx, *Capital*, Vol. III, Chapter XLVII (*Genesis of Capitalist Ground-Rent*).—13.

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை—600098

ஷோ-ரூம்

136, அண்ணாசாலை, சென்னை—600002

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001
3-4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர்—641018
42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008
செர்ரி ரோடு, சேலம்—636001

விற்பனை நிலையங்கள்

3-22-75-D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்—627001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ், உதகமண்டலம்—643001
நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல்—624001

# மார்க்ஸ் எங்கெல்ஸ் லெனின் நூல்கள்



மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினின் படைப்புகளைப் படிப்பதன் மூலம் மட்டுமே இன்றைய உலகத்தையும் இதில் நடைபெறும் நிகழ்ச்சிப் போக்குகளையும் புரிந்து கொள்ள முடியும்.

இவர்களின் படைப்புகளை ''முன்னேற்றப் பதிப்பகம்'' 50க்கும் மேற்பட்ட உலக மொழிகளில் பிரசுரித்து வருகிறது.

இவை திரட்டு நூல்களாகவும் தேர்வு நூல்களாகவும் குறிப்பிட்ட தலைப்புகளிலான தொகுப்புகளாகவும் தனிப்பட்ட புத்தகங்களாகவும் வெளிவருகின்றன.

இவர்களின் முக்கியப் படைப்புகளைப் பற்றிய விசேஷ பிரசுரங்களும் வெளியிடப்படுகின்றன.

இந்தத் தொடர்வரிசையில் அடங்கியுள்ள தொகுதிகளிலும் முக்கியமான படைப்புகளிலும் மார்க்சிய-லெனினிய ஆசான்கள் இயற்கை, சமுதாயம், சிந்தனை ஆகியவற்றின் வளர்ச்சி பற்றிய தம் போதனையை வெளியிட்டுள்ளனர், முதலாளித்துவத்தின் சமூக-பொருளாதார உறவுகளையும் சோஷலிசத்தின் அடிப்படை நியதிகளையும் ஆராய்கின்றனர்.

இந்நூல்களில் ஆராயப்பட்டுள்ள பிரச்சினைகள் நம் காலத்திற்கும் முக்கியமானவை.

எல்லா நூல்களுடனும் நவீன விஞ்ஞான தகவல் அனுபந்தம் இணைக்கப்பட்டுள்ளது.

மார்க்சிய-லெனினியத் தத்துவத்தைப் பயிலும் போது இத்தொடர்வரிசை நூல்கள் மூலநூல்களாகத் திகழத்தக்கவை.

முன்னேற்றப் பதிப்பகம் • மாஸ்கோ

குட்டி முதலாளித்துவ சோஷலிசமும் பாட்டாளி வர்க்க சோஷலிசமும் | லெனின்